## விநாயகர் போற்றி



ஓங்கார வடிவமான முழுமுதற் பொருளோன் என போற்றப்படும் விநாயகப் பெருமான் கிரகங்களில் ஞானகாரகனான கேதுவுக்கு அதிபதியாகவும், விளங்குகிறார். இவரை எந்த வழிபாட்டின் போதும் முதன்மையாக வழிபட்டு தொடங்குவதே சாலச் சிறந்தது. நாம் வழிபடும் வேண்டுதல்கள் தடையில்லாமல் கிடைக்க ஆசீர்வாதமும் செய்வார்.

இவரை வாரத்தில் திங்கட்கிழமைகளிலும், திதிகளில் சதுர்த்திகளிலும், கிரக பலன்களுக்காக செவ்வாய் கிழமை இராகு காலங்களிலும் வழிபடுவது தனிச்சிறப்பு. இவரை காலை, மாலை எப்போது வேண்டுமானாலும் வணங்கலாம். விளக்கு ஒன்று ஏற்றி, விநாயகருக்கு மஞ்சள், குங்குமம் பொட்டிட்டு, நறுமண உதிரிபூக்கள் சாற்றி, எளிமையாக வெற்றிலை பாக்குடன் கற்கண்டு, சர்க்கரை, வெல்லம், இவைகளில் ஏதேனும் ஒரு இனிப்பு வைத்து வழிபடலாம். மேலே கூறிய சிறப்பான நாட்களில் மட்டும் விநாயகருக்கு பிடித்தமானது என கூறப்படும் அவல், பொரி, மோதகம், பழங்கள் என ஏதாவது வைத்து வழிபடுவது சிறப்பு.

**வழிபாடு :** மனம் ஒன்றி போற்றிகள் கூறி வழிபாடு முடிந்த பின்னர் தூபம் (வாசனைப்புகை) தீபம் (கற்பூர ஆரத்தி) காட்டி மனம் ஒன்றி வேண்டி முடிக்க வேண்டும்.

### போற்றிகள்

ஓம் அன்னை சக்தியின் புத்திரனே போற்றி
ஓம் ஆறுமுகன் சோதரனே போற்றி
ஓம் இடுக்கண் நீக்கி அருள்வோனே போற்றி
ஓம் ஈசனின் உளம் மகிழ்வித்தோனே போற்றி
ஓம் உமையவள் உகந்த புத்திரா போற்றி
ஓம் ஊனம் களைந்தருள் புரிவாய் போற்றி
ஓம் என்றும் முதன்மையாய் இருப்பாய் போற்றி
ஓம் ஏகாந்தமாக எங்கும் இருப்பாய் போற்றி
ஓம் ஐந்து கரம் உடையாய் போற்றி
ஓம் ஒற்றைக் கொம்பு உடையாய் போற்றி 10

ஓம் ஓங்கார உருவாய் நிற்பாய் போற்றி
ஓம் அவ்வியம் அகன்ற மனமிருப்பாய் போற்றி
ஓம் முக்கண் முதல்வனே போற்றி
ஓம் மூஷிக வாகனனே போற்றி
ஓம் ஞானப் பொருளாய் ஒளிர்வோனே போற்றி
ஓம் முதன்மையாய் நின்று காப்பவனே போற்றி
ஓம் எடுக்கும் கருமம் நிறைவேற்றுவாய் போற்றி
ஓம் அனைத்திற்கும் தலைமையாய் நிற்பவனே போற்றி
ஓம் தனக்கொரு தலைவன் இல்லானே போற்றி

ஓம் உத்தம குணமே உருவானாய் போற்றி 20

ஓம் தூய்மையே ஒளியாய் கொண்டாய் போற்றி
ஓம் அருள்ஞான வடிவாய் உள்ளோனே போற்றி
ஓம் ஞானப் பிழம்பாய் தகிப்பவனே போற்றி
ஓம் அருகினை ஆரமாய் கொண்டவனே போற்றி
ஓம் அத்தி முகத்தை உடையாய் போற்றி
ஓம் அருக்கனையும் வெல்லும் ஒளியானாய் போற்றி
ஓம் அனந்தமறைப் பொருளின் உருவே போற்றி
ஓம் எளிதாய் எங்கும் உருக்கொள்வாய் போற்றி
ஓம் முக்திக்கு வழிவகுத்து தருவாய் போற்றி
ஓம் சித்திகள் பலவும் தந்தருள்வாய் போற்றி 30

ஓம் மோதகம் கைக்கொண்டருள்வாய் போற்றி
ஓம் முன்னின்று யாவும் நடத்தி வைப்பாய் போற்றி
ஓம் மூடிய மாயையை அகற்றுவாய் போற்றி
ஓம் மூலாதாரத்தில் தணலென இருப்பாய் போற்றி
ஓம் ஆதார தாமரைகள் அசைவிப்பாய் போற்றி
ஓம் ஆடாத உள்ளத்தில் ஆசனம் கொள்வாய் போற்றி
ஓம் குழவி உள்ளம் கொண்டவனே போற்றி
ஓம் குற்றம் புரினும் பொறுப்போனே போற்றி
ஓம் வலிமையும் உருவும் பெருத்தவனே போற்றி
ஓம் அருளிலும் அன்பிலும் எளியவனே போற்றி 40

ஓம் ஞாயிறையும் விஞ்சும் ஞான ஒளி உடையாய் போற்றி
ஓம் திங்களையும் மிஞ்சும் தண்ணருள் பொழிவாய் போற்றி
ஓம் சேயோனையும் மிஞ்சும் எழில் உடையாய் போற்றி
ஓம் புதனையும் தோற்கும் மதி கொண்டாய் போற்றி
ஓம் குருவினையும் கடந்த மோனநிலை உள்ளாய் போற்றி
ஓம் கவியினை வென்றிடும் தரும ஒளிவீசுவாய் போற்றி
ஓம் சனியினையும் மிஞ்சும் அமைதி கொண்டாய் போற்றி
ஓம் கோள்கள் அனைத்தின் குணம் கொண்டாய் போற்றி
ஓம் ராகுவின் ஞானம் உன் உருவில் ஒடுங்கும் போற்றி
ஓம் கேதுவின் முக்திநிலை அருளும் நின்பாதம் போற்றி 50

ஓம் அகிலாண்ட முதற்பொருளே போற்றி
ஓம் கொடுவினைகளையும் கிழித்தெறிந்து அருள்வாய் போற்றி
ஓம் ஆவல் தன்னை அடக்கி ஆள்வாய் போற்றி
ஓம் யாவற்றிற்கும் தலைமை ஏற்பவனே போற்றி
ஓம் முக்தியும் சித்தியும் சக்தியாய் கொண்டாய் போற்றி
ஓம் திக்கெட்டும் நடனம் புரிவாய் போற்றி
ஓம் மாரியென ஞானம் பொழிவாய் போற்றி
ஓம் வேண்டுதல் யாவும் நிறைவேற்றி தருபவனே போற்றி
ஓம் விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனே போற்றி
ஓம் விழிமலரில் ஞானம் உடையாய் போற்றி 60

ஓம் தும்பிக்கையால் துயரைத் துடைப்பாய் போற்றி
ஓம் வெள்ளெருக்கில் விரும்பியே உறைவாய் போற்றி
ஓம் வெங்கனல் சக்தியென கைக்கொண்டாய் போற்றி

ஓம் மறைகள் போற்றும் முதற்பொருளே போற்றி
ஓம் மாசற்ற ஒளியென வீற்றிருப்பாய் போற்றி
ஓம் பாவச் செயல்கள் கடிந்திருப்பாய் போற்றி
ஓம் பார்வையில் மும்மலமும் நீக்கி அருள்வாய் போற்றி
ஓம் பாலும் தேனும் பரிந்தேற்பாய் போற்றி
ஓம் கனியும் பொரியும் விரும்புவாய் போற்றி
ஓம் கலைகளைக் காத்து நிற்கும் தலைவனே போற்றி 70

ஓம் கலைகளைப் படைத்துத் தருபவனே போற்றி
ஓம் கற்றிடும் அனைத்திற்கும் முதன்மையானவனே போற்றி
ஓம் காத்து நிற்பாய் அருட்கலைகளை போற்றி
ஓம் காமமும் வெகுளியும் விலக்கி ஆள்பவனே போற்றி
ஓம் விருப்பும் வெறுப்பும் நீக்கி அருள்பவனே போற்றி
ஓம் வேண்டாமலே குறை உணர்ந்து தீர்ப்போனே போற்றி
ஓம் விரும்பும் ஞானம் விரைந்து தருபவனே போற்றி
ஓம் உள்ளத்தில் ஒளியாய் தங்கி ஆள்வாய் போற்றி
ஓம் ஞானத் தாமரையில் ஆசனம் கொள்வாய் போற்றி
ஓம் அஞ்ஞானக் கிரியை துடைத்து எறிவாய் போற்றி 80

ஓம் ஞானச்சுடரினை ஏற்றி வைப்பாய் போற்றி
ஓம் யோகமார்க்கம் உடையவனே போற்றி
ஓம் அமுத சாகரமே உனக்குள் போற்றி
ஓம் விழித்திருக்கும் சுகம் தந்தருள்வாய் போற்றி
ஓம் இடையூறு களைந்து காத்திருப்பாய் போற்றி
ஓம் இன்பத்தை ஊற்றாகப் பெருகச் செய்வாய் போற்றி
ஓம் பிறவாப் பேரின்ப நிலையருள்வாய் போற்றி
ஓம் பிணிகளைக் கடிந்தே தகர்த்து எறிவாய் போற்றி
ஓம் சக்கர சுழற்சிகளுக்கு எட்டாதவனே போற்றி
ஓம் தத்துவப் பொருள் தந்தருள்வாய் போற்றி 90

ஓம் தவறாத உரிய நெறிபுகட்டி அருள்வாய் போற்றி
ஓம் ஓங்கார விளக்கம் கற்பித்தருள்வாய் போற்றி
ஓம் சன்மார்க்க நெறி தழைவித்தருள்வாய் போற்றி
ஓம் ஞானமும் வளமும் அண்டினோர்க்கு ஈவாய் போற்றி
ஓம் அச்சமிலா அருள் நிலை தந்திடுவாய் போற்றி
ஓம் ஆணவம் ஆவல் களைந்திடுவாய் போற்றி
ஓம் இறுதியிலா இன்பநிலை தந்தருள்வாய் போற்றி
ஓம் ஈடான அருள் ஞானம் உனக்கு ஈடு இணையில்லை போற்றி
ஓம் உரியநிலை கற்பித்தருள்வாய் போற்றி
ஓம் பணிந்தே துதித்து நிற்கின்றோம் போற்றி 100

ஓம் விருப்புடன் இங்குவந்து அமர்ந்திடுவாய் போற்றி
ஓம் மனம் மகிழ அருள் புரிவாய் போற்றி
ஓம் எடுத்திடும் பணிகள் யாவும் கூட்டி வைப்பாய் போற்றி
ஓம் பேதமின்றி யாவும் நடத்திவைப்பாய் போற்றி
ஓம் குறைவின்றி யாவும் அமைத்திட அருள்வாய் போற்றி
ஓம் யாவும் உணர்ந்த தலைவா நின்தாள் போற்றி
ஓம் ஐங்கரனே விநாயகனே போற்றி

ஓம்! ஓம்! ஓம்! ஓங்கார கணபதியே போற்றி! போற்றி 108

ஓம் விக்நேஸ்வராய நமஹ